செ.வெ.எண். 57/அக்டோபர் நாள் : 29.10.2019

**சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்து மாநில அளவில் தருமபுரி மாவட்டம் சிறுசேமிப்பு வசூலில் முன்னிலை பெற்றிட மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்.**

சிக்கனத்தின் அவசியத்தையும், சேமிப்பின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தும் வகையில் இந்தியாவில் ஆண்டுதோறும் அக்டோபர் 30-ந்தேதி **உலக சிக்கன நாளாக** கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. அதன்படி, 30.10.2019 அன்று **உலக சிக்கன நாளாக** நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.

சிக்கனத்தை கடைபிடிக்க வேண்டும் எனும் பொழுது தேவையற்ற செலவுகளை தவிர்த்தல், திட்டமிட்டுச் செலவிடுதல், வீண் விரயம் செய்யாமல் இருத்தல், ஆடம்பரத்திற்கு ஆட்படாமல் இருத்தல், அத்தியாவசிய செலவுகளை மட்டும் மேற்கொள்ளுதல் மற்றும் சமூகத் தீமைகளில் ஈடுபட்டு பொருள் அழிவிற்கு வகை செய்யாதிருத்தல் ஆகிய நல்ல பழக்கங்களை ஒவ்வொருவரும் தவறாமல் கடைபிடிக்க வேண்டும்.

” **இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு** ” என்பதற்கேற்ப எதிர்கால வாழ்க்கை பாதுகாப்பாகவும், இனிமையானதாகவும் அமைந்திட, பெற்றோர்கள் தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை தொடர்ந்து சேமிப்பதோடு, தங்கள் பிள்ளைகளுக்கும் சிறுவயது முதலே சேமிப்பின் அவசியத்தை உணர்த்திடும் வகையில் சேமிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்தி **”சிக்கனம்”** என்னும் அடித்தளத்தின் மீதே **”சேமிப்பு”** எனும் கட்டிடத்தை எழுப்ப இயலும் என்பதை உணர்த்திட வேண்டும்.

மக்கள் சேமிப்பின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்வதால், அத்தொகை தங்கள் எதிர்கால வாழ்க்கைக்கு உதவுவதுடன், அரசின் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் பெரிதும் பயன்படும்.

எனவே, அனைத்து தரப்பு பொது மக்களும் தங்கள் வாழ்வில் பொருளாதாரப் பாதுகாப்புடன் சிறந்து விளங்கிட, அருகாமையிலுள்ள அஞ்சலகங்களில் தங்களுக்கேற்ற சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்து வாழ்வில் வளம் பெறவேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**